भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

*பகுதி XV பிரிவு 1*

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

नई दिल्ली, सनिवार, 17 मार्च, 2001/1921 सका

New Delhi, Saturday, 17th March 2001/1921 Saka

*புது தில்லி, 2001 மார்ச்சு 17 சனிக்கிழமை 1921 சக*

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

The Translation in Tamil of The Narcotic Drugs and Psychotropic Substances Act, 1985 (61 of 1985), The General Clauses Act, 1897 (10 of 1897), The Central Boards of Revenue Act, 1963 (54 of 1963), and The Remittances of Foreign Exchange and Investment in Foreign Exchange Bonds (Immunities and Exemptions) Act, 1991 (41 of 1991) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*மயக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் சட்டம், 1985 (61/1985), பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897 (10/1897), மைய வருவாய் வாரியங்கள் சட்டம், 1963 (54/1963), அயல்நாட்டுச் செலாவணிச் செலுத்தங்கள் மற்றும் அயல்நாட்டுச் செலாவணி பிணைமுறிகளில் முதலீடு செய்தல் (காப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள்) சட்டம், 1991 (41/1991) ஆகியவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

**[ Price : Rs. 75.00**

# பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897

## (சட்ட எண் 10/1897)

[1897, மார்ச் 11]

பொது வகையங்கள் விளக்கச் சட்டங்கள், 1868, 1887 ஆகியவற்றை ஒருங்கிணைத்து அளாவும்படிச் செய்வதற்கான ஒரு சட்டம். 1/1868 1/1887

பொது வகையங்கள் விளக்கச் சட்டங்கள், 1868, 1887 ஆகியவற்றை ஒருங்கிணைப்பதும் அளாவும்படிச் செய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

### முன்னுரை

குறுந்தலைப்பு. 1. (1) இந்தச் சட்டம், பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897 என்று வழங்கப்பெறும்.

(2) [நீக்கறவு செய்யப்பட்டது.]

2. [நீக்கறவு செய்யப்பட்டது.]

### பொதுப் பொருள்வரையறைகள்

பொருள் வரையறைகள். 3. இந்தச் சட்டத்திலும், இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகள் அனைத்திலும், பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி,—

(1) "உடந்தையாயிரு" என்பது, அதனுடைய இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்திலுள்ளதைப் போன்ற அதே பொருளை உடையதாகும்; 45/1860

(2) ஒரு குற்றச்செயல் அல்லது ஓர் உரிமைத்திங்கு குறித்து பயன்படுத்தப்பட்ட "செயல்" என்பது, தொடர்ச்சியான செயல்களை உள்ளடக்கும், மற்றும் செய்யப்பட்ட செயல்களைச் சுட்டும் சொற்கள் சட்டமுரணான விடுகைகளையும் அளாவி நிற்கும்;

(3) "ஆணையுறுதி ஆவணம்" என்பது, ஆணைமொழிதலுக்குப் பதிலாக, உறுதிமொழி செய்யவோ விளம்புகை செய்யவோ சட்டத்தினால் அனுமதிக்கப்படும் நபர்களாக இருக்கும் நேர்வில் உறுதிமொழியையும் விளம்புகையையும் உள்ளடக்கும்;

(4) "பாரிஸ்டர்" என்பது, இங்கிலாந்து அல்லது அயர்லாந்துப் பாரிஸ்டர் ஒருவர் அல்லது ஸ்காட்லாந்திலுள்ள வழக்குரைஞர்கள் குழுவின் ஓர் உறுப்பினர் என்று பொருள்படும்;

(5) "பிரிட்டிஷ் இந்தியா" என்பது, இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் பகுதி III இன் தொடக்கநிலைக்கு முந்திய காலஅளவு குறித்து மாட்சிமை தங்கிய அரசரால், இந்தியாவின் ஆளுநர்—தலைவர் மூலமாக, அல்லது இந்தியாவின் ஆளுநர்—தலைவருக்குக் கீழ்நிலையிலுள்ள ஆளுநர் அல்லது அலுவலர் எவர் மூலமாகவும், அப்போதைக்கு ஆளப்பட்ட மாட்சிமை தங்கிய அரசரின் தன்னாட்சியங்களிலுள்ள அனைத்து ஆட்சிநிலவரைகளும், இடங்களும் என்று பொருள்படும்; மேலும், அந்தத் தேதிக்குப் பின்பும், இந்தியத் தன்னாட்சியம் நிறுவப்பட்டதற்கு முன்புமான காலஅளவு எதையும் பொறுத்து, அப்போதைக்கு ஆளுநர்களின் மாகாணங்களிலும் தலைமை ஆணையரின் மாகாணங்களிலும் அடங்கியுள்ள அனைத்து ஆட்சிநிலவரைகளும் என்று பொருள்படும்; இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் பகுதி III இன் தொடக்கநிலைக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஓர் இந்தியச் சட்டத்தில் பிரிட்டிஷ் இந்தியாவைப் பற்றிய சுட்டுகையானது, "பீரார்" என்பதற்கான சுட்டுகையை உள்ளடக்காது என்பது தவிர:

(6) “பிரிட்டிஷ் ஆட்சியின் கீழமைந்த நிலப்பரப்பு” என்பது, ஐக்கியக் கூட்டரசு (United Kingdom) நீங்கலான மாட்சிமை தங்கிய அரசியாரின் தன்னாட்சியங்களின் பகுதி எதுவும் என்று பொருள்படும்; மேலும், அந்தத் தன்னாட்சியங்களின் பகுதிகள் ஒரு மையச் சட்டமன்றம் மற்றும் ஒரு வட்டாரச் சட்டமன்றம் ஆகிய இரண்டின் கீழும் இருக்குமிடத்து, இந்தப் பொருள்வரையறையின் நோக்கங்களுக்காக, மையச் சட்டமன்றத்தின் கீழுள்ள அனைத்துப் பகுதிகளும், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழமைந்த ஒரே நிலப்பரப்பாகவே கொள்ளப்படும்;

(7) “மையச் சட்டம்” என்பது, நாடாளுமன்றச் சட்டம் ஒன்று என்று பொருள்படும், மேலும்—

(அ) அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட தன்னாட்சியச் சட்டமன்றத்தின் அல்லது இந்தியச் சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றையும், மற்றும்

(ஆ) அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு சட்டம் இயற்றும் திறத்துடன் செயலுறும் மன்றத்தமர் ஆளுநர்—தலைவரால் அல்லது ஆளுநர்—தலைவரால் செய்யப்பட்ட சட்டம் ஒன்றையும்

உள்ளடக்கும்;

(8) “மைய அரசாங்கம்” என்பது,—

(அ) அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட எதன் தொடர்பாகவும் ஆளுநர்—தலைவர் அல்லது, நேர்வுக்கேற்ப, மன்றத்தமர் ஆளுநர்—தலைவர் என்று பொருள்படும்; மேலும்

(i) இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் பிரிவு 124 இன் உட்பிரிவு (1) இன்படி ஒரு மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகள் தொடர்பாக, அந்த உட்பிரிவின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் மாகாண அரசாங்கத்தையும்;

(ii) தலைமை ஆணையரின் மாகாண நிருவாகம் தொடர்பாக, சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 94 இன் உட்பிரிவு (3) இன்படி அவருக்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் தலைமை—ஆணையரையும்,

உள்ளடக்கும்; மற்றும்,

(ஆ) அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டிய எது தொடர்பாகவும் குடியரசுத் தலைவர் என்று பொருள்படும்; மேலும்

(i) அரசமைப்பின் உறுப்பு 258 இன் கூறு (1) இன்படி ஒரு மாநிலத்தின் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகள் தொடர்பாக, அந்தக் கூறின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் மாநில அரசாங்கத்தையும்;

(ii) அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956 இன் தொடக்க நிலைக்கு முன்பு, பகுதி இ மாநிலத்தின் நிருவாகம் தொடர்பாக, அரசமைப்பின் உறுப்பு 239 அல்லது, நேர்வுக்கேற்ப, உறுப்பு 243 இன்படி, அவருக்கு அல்லது அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறும் தலைமை ஆணையர் அல்லது துணை நிலை ஆளுநரையும் அல்லது அண்டை மாநிலத்தின் அரசாங்கம் அல்லது பிற அதிகார அமைப்பையும், மற்றும்

(iii) ஒன்றியத்து ஆட்சி நிலவரையின் நிருவாகம் தொடர்பாக, அரசமைப்பின் உறுப்பு 239 இன்படி அவருக்கு அளிக்கப்பட்ட வீச்சுக்குள் செயலுறும் அதன் ஆளுகையரையும்

உள்ளடக்கும்;

(9) "அத்தியாயம்" என்பது, எந்தச் சட்டத்தில் அல்லது ஒழுங்குறுத்தும் விதியில் அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் ஓர் அத்தியாயம் என்று பொருள்படும்;

(10) "வருவாய்த் துறைக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரஅமைப்பு" அல்லது "வருவாய்த் துறை தலைமை அதிகார அமைப்பு" என்பது,—

(அ) ஒரு மாநிலத்தில், ஒரு வருவாய் வாரியம் இருக்குமிடத்து, அந்த வாரியம்,

(ஆ) ஒரு மாநிலத்தில் ஒரு வருவாய்த் துறை ஆணையர் இருக்குமிடத்து, அந்த ஆணையர்,

(இ) பஞ்சாபில், நிதி ஆணையர் ; மற்றும்

(ஈ) வேறெங்கிலும், அரசமைப்பின் ஏழாம் இணைப்புப்பட்டியலில் உள்ள பட்டியல் I இல் விவரிக்கப்பட்ட பொருட்பாடுகள் தொடர்பாக மைய அரசாங்கம் மற்றும் பிற பொருட்பாடுகள் தொடர்பாக மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அமர்த்தலாகும் அதிகார அமைப்பு

என்று பொருள்படும்;

(11) "ஆட்சியர்" என்பது, ஒரு மாகாணத் தலைநகரைப் பொறுத்து, நேர்வுக்கேற்ப, கல்கத்தா, சென்னை அல்லது பம்பாய் ஆட்சியர் என்றும், வேறெங்கிலும், ஒரு மாவட்டத்தின் வருவாய்த் துறை நிருவாகத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள தலைமை அலுவலர் என்றும் பொருள்படும்;

(12) "குடியேற்ற நாடு" என்பது,—

(அ) இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் பகுதி III இன் தொடக்க நிலைக்குப் பின்பு, பிறப்பிக்கப்பட்ட மையச் சட்டம் எதிலும், பிரிட்டிஷ் தீவுகள் நீங்கலாக, மாட்சிமை தங்கிய அரசரின் தன்னாட்சியங்களின் பகுதி எதுவும், இந்தியா மற்றும் பாகிஸ்தானின் தன்னாட்சியங்கள் (மற்றும் அந்தத் தன்னாட்சியங்கள் நிறுவப்படுவதற்கு முன்பு பிரிட்டிஷ் இந்தியா), வெஸ்ட் மினிஸ்டர் சட்டம், 1931 இல் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவாறான தன்னாட்சியம் எதுவும், சொல்லப்பட்ட தன்னாட்சியங்களில் எவற்றின் பகுதியாகவும் அமைகிற ஏதேனும் மாகாணம் அல்லது மாநிலம், மற்றும் பிரிட்டிஷ் பர்மா என்று பொருள்படும், மற்றும்

(ஆ) சொல்லப்பட்ட சட்டத்தின் பகுதி III இன் தொடக்கநிலைக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட மையச் சட்டம் எதிலும், பிரிட்டிஷ் தீவுகள் மற்றும் பிரிட்டிஷ் இந்தியா நீங்கலாக, மாட்சிமை தங்கிய அரசரின் தன்னாட்சியங்களின் பகுதி எதுவும் என்று பொருள்படும்;

மேலும், நேர்வுகள் இரண்டில் ஏதொன்றிலும், மைய மற்றும் மாநிலச் சட்டமன்றம் இரண்டின் கீழும் அந்தத் தன்னாட்சியங்களின் பகுதிகள் இருக்குமிடத்து, மையச் சட்டமன்றத்தின் கீழுள்ள பகுதிகள், அனைத்தும் இந்தப் பொருள்வரையறையின் நோக்கங்களைப் பொறுத்தவரை, ஒரே குடியேற்ற நாடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(13) ஒரு சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "தொடக்கநிலை" என்பது, அந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி செல்லாற்றலுக்கு வரும் நாள் என்று பொருள்படும்;

(14) "ஆணையர்" என்பது, கோட்டமொன்றில் வருவாய்த் துறை நிருவாகத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள தலைமை அலுவலர் என்று பொருள்படும்;

(15) "அரசமைப்பு" என்பது, இந்தியாவின் அரசமைப்பு என்று பொருள்படும்;

(16) "துணைத் தூதரக அலுவலர்" என்பது, தலைமைத் துணைத் தூதர், துணைத் தூதர், உதவித் துணைத் தூதர், துணைத் தூதரக முகவர், இணைத் துணைத் தூதர் ஆகியோரையும், தலைமைத் துணைத் தூதர், துணைத் தூதர், உதவித் துணைத் தூதர் அல்லது துணைத் தூதரக முகவர் ஆகியோரின் கடமைகளைப் புரிவதற்கு அப்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர் எவரையும் உள்ளடக்கும்;

(17) "மாவட்ட நீதிபதி" என்பது, முதலேற்பு அதிகாரவரம்புடைய தலைமை உரிமையியல் நீதிமன்றத்தின் நீதிபதி என்று பொருள்படும், ஆனால், அதன் இயல்பான அல்லது இயல்விகந்த முதலேற்பு உரிமையியல் அதிகார வரம்பைச் செலுத்துகையில், ஓர் உயர் நீதிமன்றத்தை உள்ளடக்காது;

(18) "ஆவணம்" என்பது, பொருட்பாடு எதனையும் பதிவு செய்யும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தக் கருதப்படும் அல்லது பயன்படுத்தப்படலாகும் எழுத்துக்கள், எண்கள் அல்லது குறிகள் வாயிலாகவோ அந்த வழிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் வாயிலாகவோ, பொருள் எதன்மீதும் எழுதப்பட்ட, வெளிப்படுத்தப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட அந்தப் பொருட்பாட்டை உள்ளடக்கும்;

(19) "செய்சட்டம்" என்பது, (இதில் இதற்குப் பின்பு பொருள் வரையறை செய்யப்பட்டவாறான) ஓர் ஒழுங்குறுத்தும் விதியையும், வங்காளம், சென்னை அல்லது பம்பாய் தொகுப்புச் சட்டத்தின் ஒழுங்குறுத்தும் விதி எதையும் உள்ளடக்கும், மற்றும் சட்டம் எதிலும் அல்லது மேற்சொன்ன விதி எதிலும் அடங்கியுள்ள வகையம் எதையும்கூட உள்ளடக்கும்;

(20) "தந்தை" என்பது, எவரொருவரின் இனமுறைச் சட்டம், மகவேற்பை அனுமதிக்கிறதோ, அவராக இருக்கும் நேர்வில், மகவேற்கும் தந்தையை உள்ளடக்கும்;

(21) "நிதியாண்டு" என்பது, ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்குகிற ஆண்டு என்று பொருள்படும்;

(22) ஒரு காரியம் கவனமின்றி செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் உண்மையில் அது நேர்மையாகச் செய்யப்பட்டிருக்குமிடத்து, அது "நல்லெண்ணத்தில்" செய்யப்பட்டது என்று கொள்ளப்படுதல் வேண்டும்;

(23) "அரசாங்கம்" அல்லது "அந்த அரசாங்கம்" என்பது, மைய அரசாங்கம், ஏதேனும் மாநில அரசாங்கம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்;

(24) "அரசாங்கக் கடனீட்டு ஆவணங்கள்" என்பது, மைய அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாநில அரசாங்கத்தின் கடனீட்டு ஆவணங்கள் என்று பொருள்படும், ஆனால் அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதிலும், ஏதேனும் பகுதி ஆ மாநில அரசாங்கத்தின் கடனீட்டு ஆவணங்களை உள்ளடக்காது;

(25) உரிமையியல் நடவடிக்கைகள் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "உயர் நீதிமன்றம்" என்பது, அந்தச் சொற்றொடர் அடங்கிய சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி இந்தியாவின் எந்தப் பகுதியில் செயல்படுகிறதோ அந்தப் பகுதியிலுள்ள (உச்ச நீதிமன்றத்தை உள்ளடக்காத) மிக உயர்ந்த உரிமையியல் மேல்முறையீட்டு நீதிமன்றம் என்று பொருள்படும்;

(26) "நிலையியல் சொத்து" என்பது, நிலம், நிலத்திலிருந்து எழும் பயன்கள், மற்றும் பூமியுடன் சேர்ந்துள்ள அல்லது பூமியுடன் சேர்ந்துள்ள எப்பொருளுடனும் நிலையாகப் பிணைக்கப்பட்டுள்ள பொருள்களை உள்ளடக்கும்;

(27) "சிறைத்தண்டனை" என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான இரண்டு விவரிப்புகளில் ஏதேனுமொன்று என்று பொருள்படும்;

(28) "இந்தியா" என்பது,—

(அ) இந்தியத் தன்னாட்சியம் நிறுவப்படுவதற்கு முன்பான காலஅளவு எதுவும் தொடர்பாக, மாட்சிமை தங்கிய அரசரின் மேலாட்சியின் கீழ் அப்போது இருந்த இந்திய அரசர்களின் அனைத்து ஆட்சி நிலவரைகளும், அத்தகைய ஓர் இந்திய அரசரின் மேலாட்சியின் கீழுள்ள அனைத்து ஆட்சிநிலவரைகளும், மற்றும் பழங்குடியினர் பகுதிகளும் சேர்ந்த பிரிட்டிஷ் இந்தியா;

(ஆ) இந்தியத் தன்னாட்சியம் நிறுவப்பட்டதற்குப் பின்பும், அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்புமான காலஅளவு எது தொடர்பாகவும் அந்தத் தன்னாட்சியத்தில் அப்போதைக்குச் சேர்க்கப்பட்டிருந்த ஆட்சிநிலவரைகள் அனைத்தும்; மற்றும்

(இ) அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பிந்தியதான காலஅளவு எது தொடர்பாகவும், இந்திய ஆட்சிநிலவரையில் அப்போதைக்கு உள்ளடங்கியிருந்த ஆட்சிநிலவரைகள் அனைத்தும்

என்று பொருள்படும்;

(29) "இந்தியச் சட்டம்" என்பது, அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு இந்திய மாகாணம் எதிலும் அல்லது அதனுடைய பகுதி எதிலும் சட்ட ஆற்றல் கொண்டிருந்ததான அல்லது அதற்குப் பின்பு பகுதி (அ) மாநிலம், அல்லது பகுதி (இ) மாநிலம் அல்லது அவற்றின் பகுதி எதிலும் சட்ட ஆற்றல் கொண்டிருக்கிறதான சட்டம், அவசரச் சட்டம், ஒழுங்குறுத்தும் விதி, ஆணை, துணை விதி அல்லது பிற முறையாவணம் எதுவும் என்று பொருள்படும்; ஆனால் ஐக்கியக் கூட்டரசின் நாடாளுமன்றச் சட்டம் எதையும் அல்லது மன்றம் பிறப்பித்த ஆணை (Order in Council) அத்தகைய சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிற முறையாவணம் எதையும் உள்ளடக்காது;

(30) "இந்தியக் குறுநிலம்" என்பது, அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு, ஒரு குறுநிலமாக, ஓர் உரிமைநிலச் சொத்தாக, ஒரு ஜாகீராக, அல்லது பிறவாறாக விவரிக்கப்பட்டிருந்தாலும், மைய அரசாங்கத்தால் அத்தகைய ஒரு குறுநிலம் என்று ஏற்பளிக்கப்பட்ட நிலப் பரப்பு எதுவும் என்று பொருள்படும்;

(31) "வட்டார அதிகார அமைப்பு" என்பது, ஒரு நகராட்சியின் அல்லது வட்டாரத்தின் நிதியைக் கட்டாள்கை அல்லது மேலாண்மை செய்யச் சட்டப்படி உரிமைக் கொண்ட அல்லது அரசாங்கத்தால் அந்தக் கட்டாள்கை அல்லது மேலாண்மை ஒப்படைக்கப்பட்டுள்ள, ஒரு நகராட்சிக் குழு, மாவட்ட வாரியம், துறைமுக ஆணையர்களின் குழுமம் அல்லது பிற அதிகார அமைப்பு எதுவும் என்று பொருள்படும்;

(32) "குற்றவியல் நடுவர்" என்பது, அப்போதைக்குச் செல்லாற்றலிலிருக்கும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி ஒரு குற்றவியல் நடுவரின் அதிகாரம் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எவற்றையுமோ செலுத்துகிற நபர் ஒவ்வொருவரையும் உள்ளடக்கும்;

(33) கப்பல் ஒன்று தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "தலைவர்" என்பது, அப்போதைக்கு, கப்பலைத் தம் கட்டாள்கையில் அல்லது பொறுப்பில் கொண்டுள்ள (மாலுமி அல்லது துறைமுகத் தலைவர் தவிர) நபர் எவரும் என்று பொருள்படும்;

(34) "இணைக்கப்பட்ட ஆட்சி நிலவரைகள்" என்பது, இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் பிரிவு 290 (அ) இன்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையின் பயன்திறனால், அரசமைப்பின் தொடக்கநிலையை ஒட்டி முன்பு, ஓர் ஆளுநரின் மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாற்போன்று அல்லது ஒரு தலைமை மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாற்போன்று அல்லது ஒரு தலைமை ஆணையரின் மாகாணமாக இருந்தாற்போன்று, எந்த ஆட்சி நிலவரைகள் நிருவகிக்கப்பட்டு வந்தனவோ அந்த ஆட்சிநிலவரைகள் என்று பொருள்படும்;

(35) "மாதம்" என்பது, பிரிட்டிஷ் நாள்காட்டியின்படி கணக்கிடப்படும் ஒரு மாதம் என்று பொருள்படும்;

(36) "அசைவியல் சொத்து" என்பது, நிலையியல் சொத்து அல்லாத ஒவ்வொரு விவரிப்பையுமுடைய சொத்து என்று பொருள்படும்;

(37) "ஆணையுறுதி" என்பது, ஆணைமொழிதலுக்குப் பதிலாக, உறுதிமொழி செய்யவோ, விளம்புகை செய்யவோ சட்டத்தினால் அனுமதிக்கப்படும் நபர்களாக இருக்கும் நேர்வில், உறுதிமொழியையும், விளம்புகையையும் உள்ளடக்கும்;

(38) "குற்றச் செயல்" என்பது, அப்போதைக்குச் செல்லாற்றலிலிருக்கும் சட்டம் எதனாலும் தண்டிக்கத்தக்கதாக ஆக்கப்பட்ட செயல் அல்லது விடுகை எதுவும் என்று பொருள்படும்;

(39) "அதிகாரமுறை அரசிதழ்" அல்லது "அரசிதழ்" என்பது, இந்திய அரசிதழ் அல்லது ஒரு மாநிலத்தின் அதிகாரமுறை அரசிதழ் என்று பொருள்படும்;

(40) "பகுதி" என்பது, எந்தச் சட்டம், அல்லது ஒழுங்குறுத்தும் விதியில், அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் ஒரு பகுதி என்று பொருள்படும்;

(41) "பகுதி (அ) மாநிலம்" என்பது, அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம் 1956-க்கு முன்பு செல்லாற்றலில் இருந்த, அரசமைப்பின் முதலாம் இணைப்புப் பட்டியலின் பகுதி (அ)இல் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் என்று பொருள்படும்; "பகுதி (ஆ) மாநிலம்" என்பது, அந்த இணைப்புப் பட்டியலின் பகுதி (ஆ)இல் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் என்று பொருள்படும்; "பகுதி (இ) மாநிலம்" என்பது, அந்த இணைப்புப் பட்டியலின் பகுதி (இ) இல் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் அல்லது அரசமைப்பின் உறுப்பு 243 இன் வகையங்களின்படி குடியரசுத் தலைவரால் அப்போதைக்கு நிருவகிக்கப்படும் ஓர் ஆட்சிநிலவரை என்று பொருள்படும்;

(42) "நபர்" என்பது, நிறுமம் அல்லது கழகம் அல்லது தனிநபர்களின் குழுமம் எதையும், அது கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், உள்ளடக்கும்;

(43) "அரசியல் முகவர்" என்பது,—

(அ) இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஆட்சிநிலவரை எது தொடர்பாகவும் அத்தகைய ஆட்சிநிலவரையில் மைய அரசாங்கத்தைச் சார்பாற்றம் செய்கிற தலைமை அலுவலர், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், அவர் என்றும்,

(ஆ) இந்தியாவினுள் இருக்கிற எந்த ஆட்சிநிலவரை தொடர்பாக, அந்தச் சொற்றொடரைக் கொண்டுள்ள சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி அளாவவில்லையோ அந்த ஆட்சி நிலவரை எது தொடர்பாகவும், அந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின்படி ஓர் அரசியல் முகவரின் அதிகாரங்கள் அனைத்தையுமோ அவற்றுள் எதையுமோ செலுத்துவதற்காக மைய அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட அலுவலர் எவரும், என்றும்

பொருள்படும்;

(44) "மாகாணத் தலைநகர்" என்பது, நேர்வுக்கேற்ப, கல்கத்தா, சென்னை அல்லது பம்பாயில் இருக்கிற நீதித் துறையாட்சி உயர் நீதிமன்றத்தின் இயல்பான முதலேற்பு உரிமையியல் அதிகாரவரம்பில் அப்போதைக்கு இருக்கிற வட்டார எல்லைக்குள் உள்ளது என்று பொருள்படும்;

(45) "மாகாணம்" என்பது, ஒரு ராஜதானி, ஓர் ஆளுநரின் மாகாணம், ஒரு துணைநிலை ஆளுநரின் மாகாணம் அல்லது ஒரு தலைமை ஆளுநரின் மாகாணம் என்று பொருள்படும்;

(46) "மாகாணச் சட்டம்" என்பது, இந்தியச் சட்ட மன்றங்களின் சட்டங்களில் ஏதேனுமொன்று அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1915 இன்படி ஒரு மாகாணத்தின் மன்றத்தமர் ஆளுநரால், மன்றத்தமர் துணை நிலை ஆளுநரால் அல்லது மன்றத்தமர் தலைமை ஆணையரால் செய்யப்பட்ட சட்டம் என்றும், அல்லது இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி வட்டாரச் சட்டமன்றத்தால் அல்லது மாகாண ஆளுநரால் செய்யப்பட்ட சட்டம் என்றும், அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன்படி மாகாணச் சட்டமன்றத்தாலோ ஒரு மாகாண ஆளுநராலோ, அல்லது குடகு நாட்டின் சட்டமன்ற மேலவையாலோ செய்யப்பட்ட ஒரு சட்டம் என்று பொருள்படும்;

(47) அரசமைப்பின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட எது தொடர்பாகவும், "மாகாண அரசாங்கம்" என்பது, தொடர்புடைய தேதியில் பிரச்சினையிலுள்ள மாகாணத்திலுள்ள அரசாங்க ஆட்சித் துறையை நிருவகிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகார அமைப்பு அல்லது நபர் என்று பொருள்படும்;

(48) "பொதுத்தொல்லை" என்பது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான பொதுத்தொல்லை என்று பொருள்படும்; 45/1860

(49) ஆவணம் ஒன்று தொடர்பாகப் பயன்படுத்தப்படும் "பதிவு செய்யப்பட்ட" என்பது, ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட என்று பொருள்படும்;

(50) "ஒழுங்குறுத்தும் விதி" என்பது, அரசமைப்பின் உறுப்பு 240 இன்படி குடியரசுத் தலைவரால் செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும் விதி என்று பொருள்படும், மற்றும் அதன் உறுப்பு 243 இன்படி குடியரசுத் தலைவரால் செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும் விதியையும், இந்திய அரசாங்கச் சட்டம், 1870 அல்லது இந்திய அரசாங்கச் சட்டம் 1915, 1919 அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் படி மைய அரசாங்கத்தால் செய்யப்பட்ட ஓர் ஒழுங்குறுத்தும் விதியையும் உள்ளடக்கும்;

(51) "விதி" என்பது, செய் சட்டம் எதனாலும் வழங்கப்பட்ட அதிகாரம் ஒன்றைச் செலுத்திச் செய்யப்பட்ட விதி என்று பொருள்படும்; மற்றும் ஏதேனும் செய் சட்டத்தின்படியான ஒரு விதியைப்போன்று செய்யப்பட்ட ஓர் ஒழுங்குறுத்தும் விதியையும் உள்ளடக்கும்;

(52) "இணைப்புப் பட்டியல்" என்பது, எந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் இணைப்புப் பட்டியலில் அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் ஓர் இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(53) "பட்டியலில் கண்ட மாவட்டம்" என்பது, பட்டியலில் கண்ட மாவட்டங்கள் சட்டம், 1874 இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான பட்டியலில் கண்ட மாவட்டங்கள் என்று பொருள்படும்;

(54) "பிரிவு" என்பது, எந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியில் அந்தச் சொல் வருகிறதோ அந்தச் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் பிரிவு என்று பொருள்படும்;

(55) "கப்பல்" என்பது, துடுப்புகளினால் மட்டுமே முன் செலுத்தப்படாமல் கடற்பயணத்தில், பயன்படுத்தப்படும் கலத்தின் ஒவ்வொரு விவரிப்பையும் உள்ளடக்கும்;

(56) தம்முடைய பெயரை எழுத இயலாத ஒரு நபர் தொடர்பாக 'கையொப்பம்' என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே

குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், "கைநாட்டுக்குறியை" அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும் உள்ளடக்கும்;

*(57)* "மகன்" என்பது, எவரொருவரின் இனமுறைச் சட்டம் மகவேற்பை அனுமதிக்கிறதோ அவராக இருக்கும் நேர்வில், ஏற்பு மகனை உள்ளடக்கும்;

*(58)* "மாநிலம்" என்பது,—

*(அ)* அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956 இன் தொடக்கநிலைக்கு முந்திய கால அளவு எதுவும் தொடர்பாக, பகுதி (அ) மாநிலம் பகுதி (ஆ) மாநிலம் அல்லது பகுதி (இ) மாநிலம் என்று பொருள்படும்; மற்றும்,

*(ஆ)* அத்தகைய தொடக்கநிலைக்குப் பிந்திய கால அளவு எதுவும் தொடர்பாக, அரசமைப்பின் முதலாம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு மாநிலம் என்று பொருள்படும், மேலும், ஓர் ஒன்றியத்து ஆட்சி நிலவரையையும் உள்ளடக்கும்.

*(59)* "மாநில சட்டம்" என்பது, அரசமைப்பினால் நிறுவப்பட்ட அல்லது தொடர்ந்திருக்கும் ஒரு மாநிலச் சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் என்று பொருள்படும்;

*(60)* "மாநில அரசாங்கம்" என்பது,—

*(அ)* அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு செய்யப்பட்ட எது தொடர்பாகவும், பகுதி (அ) மாநிலத்தில் நேரிணையான மாகாணத்தின் மாகாண அரசாங்கம் என்றும், பகுதி (ஆ) மாநிலத்தில், தொடர்புடைய தேதியில், நேரிணையான இணைந்த மாநிலத்தில் அரசாங்க ஆட்சித் துறையை நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்பு அல்லது நபர் என்றும், பகுதி (இ) மாநிலத்தில் மைய அரசாங்கம் என்றும் பொருள்படும்;

*(ஆ)* அரசமைப்பின் தொடக்கநிலைக்குப் பின்பும் அரசமைப்பின் (ஏழாவது திருத்தம்) சட்டம், 1956 இன் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட எதன் தொடர்பாகவும், பகுதி (அ) மாநிலத்தில் ஆளுநர் என்றும், பகுதி (ஆ) மாநிலத்தில் இராசப் பிரமுகர் என்றும், பகுதி (இ) மாநிலத்தில் மைய அரசாங்கம் என்றும் பொருள்படும்;

*(இ)* அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், 1956 இன் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டிய எது தொடர்பாகவும், ஒரு மாநிலத்தில் ஆளுநர் என்றும், ஓர் ஒன்றியத்து ஆட்சி நிலவரையில் மைய அரசாங்கம் என்றும், பொருள்படும்;

மேலும், அரசமைப்பின் உறுப்பு 258 (அ) இன்படி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகள் தொடர்பாக, அந்த உறுப்பின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகார வீச்சுக்குள் செயலுறுகின்ற மைய அரசாங்கத்தை உள்ளடக்கும்;

*(61)* "உட்பிரிவு" என்பது, எந்தப் பிரிவின் உட்பிரிவில் அந்தச் சொல் வருகிறதோ அந்தப் பிரிவின் உட்பிரிவு என்று பொருள்படும்;

*(62)* இலக்கண வேறுபாடுகளுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடனும், "ஆணைமொழி" என்பது, ஆணைமொழிதலுக்குப் பதிலாக உறுதிமொழி செய்ய, அல்லது விளம்புகை செய்ய, சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட நபர்களாக இருக்கும் நேர்வில் உறுதிமொழியையும், விளம்புகையையும் உள்ளடக்கும்;

*(62)* (அ). "ஒன்றியத்து ஆட்சிநிலவரை" என்பது, அரசமைப்பின் முதலாம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒன்றியத்து ஆட்சிநிலவரை என்று பொருள்படும்; மேலும் இந்திய ஆட்சி நிலவரையில் அடங்கியுள்ள,

ஆனால், இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்படாத பிற ஆட்சிநிலவரை எதனையும் உள்ளடக்கும்;

*(63)* "கலம்" என்பது, கடற்பயணத்தில் பயன்படுத்தப்படும் கப்பல், அல்லது படகு அல்லது பிற விவரிப்புடைய கலம் எதனையும் உள்ளடக்கும்;

*(64)* "உயில்" என்பது, ஓர் உயிலின் பிற்சேர்க்கையையும், இறந்த பின்பு நிகழவேண்டுமென தம் விருப்பாகச் சொத்து ஏற்பாட்டைச் செய்யும் எழுத்திலான ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

*(65)* "எழுதுதல்" என்பதைச் சுட்டும் சொற்றொடர்கள், அச்சு, கல்லச்சு, ஒளிப்படம் மற்றும் காணக்கூடிய ஒரு வடிவத்தில், சொற்களை எடுத்துக்காட்டுகிற அல்லது சொற்களுக்கு மறுஉருவளிக்கிற பிற முறைகளையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

*(66)* "ஆண்டு" என்பது, பிரிட்டிஷ் நாள் காட்டியின்படி கணக்கிடப்பட்ட ஓர் ஆண்டு எனப் பொருள்படும்.

முந்திய செய் சட்டங்களுக்கு முன்சென்ற பொருள் வரையறைகள் பொருந்துதல்.

**4**. *(1)* பிரிவு *3* இலுள்ள பின்வரும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு,— அதாவது, "ஆணையுறுதி ஆவணம்", "பாரிஸ்டர்", "மாவட்ட நீதிபதி", "தந்தை", "நிலையியல் சொத்து". "சிறைத் தண்டனை", "குற்றவியல் நடுவர்", "மாதம்", "அசைவியல் சொத்து", "ஆணையுறுதி", "நபர்", "பிரிவு", "மகன்", "ஆணைமொழி", "உயில்" மற்றும் "ஆண்டு", என்பனவற்றிற்கான பொருள்வரையறைகளானவை, பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, *1968* ஜனவரி *3* ஆம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் அனைத்திற்கும், மற்றும் *1887* ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும்விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

*(2)* மேற்சொல்லப்பட்ட பிரிவில் உள்ள பின்வரும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கான, அதாவது, "உடந்தையாயிரு", "அத்தியாயம்", "தொடக்கநிலை", "நிதியாண்டு", "வட்டார அதிகாரஅமைப்பு", "தலைவர்", "குற்றச்செயல்", "பகுதி", "பொதுத்தொல்லை", "பதிவு செய்யப்பட்ட", "இணைப்புப்பட்டியல்", "கப்பல்", "கையொப்பம்", "உட்பிரிவு", "எழுதுதல்" என்பனவற்றிற்கான பொருள்வரையறைகளானவை, பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, 1887, ஜனவரி பதினான்காம் நாளில் அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் மற்றும் அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

இந்தியச் சட்டங்களுக்குச் குறித்த சில பொருள் வரையறைகள் பொருந்துதல்.

*4* ⓐ. *(1)* பிரிவு *3* இலுள்ள, "பிரிட்டிஷ் இந்தியா", "மையச் சட்டம்", "மைய அரசாங்கம்", "வருவாய்த் துறைக் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகார அமைப்பு", "வருவாய்த் துறைத் தலைமை அதிகாரஅமைப்பு", "அரசமைப்பு", "அரசிதழ்", "அரசாங்கம்", "அரசாங்கக் கடனீட்டு ஆவணங்கள்", "உயர் நீதிமன்றம்", "இந்தியா", "இந்தியச் சட்டம்", "இந்தியக் குறுநிலம்", "இணைக்கப்பட்ட ஆட்சிநிலவரைகள்", "அதிகாரமுறை அரசிதழ்", "பகுதி (அ) மாநிலம்", "பகுதி (ஆ) மாநிலம்", "பகுதி (இ) மாநிலம்", "மாகாண அரசாங்கம்", "மாநிலம்", மற்றும் "மாநில அரசாங்கம்" என்ற சொற்றொடர்களின் பொருள்வரையறைகளானவை, பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, இந்தியச் சட்டங்கள் அனைத்திற்கும் பொருந்தும்.

*(2)* இந்தியச் சட்டம் எதிலுமுள்ள சொற்களின் வடிவம் எவ்வாறிருப்பினும், மைய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் வருவாய்கள் குறித்த சுட்டுகைகளானவை *1950*, ஏப்ரல் முதல் தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தியத் திரள் நிதியம் அல்லது, நேர்வுக்கேற்ப, மாநிலத் திரள் நிதியம் குறித்த சுட்டுகைகளாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

## பொருள்கோள் பற்றிய பொது விதிகள்

செய்சட்டங்கள் செயற்பாட்டுக்கு வருதல்.

**5**. *(1)* மையச் சட்டமெதுவும், ஒரு குறிப்பிட்ட நாளன்று செயற்பாட்டுக்கு வருமென்று வெளிப்படுத்தப்படாதவிடத்து, அது,—

(அ) அரசமைப்பின் தொடக்க நிலைக்கு முன்பு செய்யப்பட்ட ஒரு மையச் சட்டமாக இருக்கும் நேர்வில், ஆளுநர் தலைவரின் மற்றும்

(ஆ) நாடாளுமன்றத்தின் ஒரு சட்டமாக இருக்கும் நேர்வில், குடியரசுத் தலைவரின்,

ஏற்பிசைவை எந்த நாளன்று பெறுகிறதோ அந்த நாளன்று செயற்பாட்டுக்கு வரும்.

(2) [நீக்கறவு செய்யப்பட்டது.]

(3) மாறானது வெளிப்படுத்தப்பட்டாலன்றி, ஒரு மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியானது, அதன் தொடக்கத்துக்கு முந்திய நாள் முடிந்த உடனே செயற்பாட்டுக்கு வருவதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

5 (அ). [நீக்கறவு செய்யப்பட்டது.]

நீக்கறவு செய்வதன் விளைவு.

6. இந்தச் சட்டம் அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதுவும், இதுவரை செய்யப்பட்ட அல்லது இதற்குப் பின்பு செய்யப்படவிருக்கிற செய்சட்டம் எதனையும் நீக்கறவு செய்யுமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த நீக்கறவானது,—

(அ) அந்த நீக்கறவு எந்த நேரத்தில் செல்திறம் பெறுகிறதோ அந்த நேரத்தில் செல்லாற்றலில் இராத அல்லது இருந்திராத எதற்கும் புத்துயிரளித்தலாகாது; அல்லது

(ஆ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட ஏதேனும் செய்சட்டத்தின் முந்திய செயற்பாட்டினை அல்லது அதன்படி முறையாகச் செய்யப்பட்ட அல்லது இசைவளிக்கப்பட்ட எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(இ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதன்படியும் பெறப்பட்ட, வந்தடைந்த அல்லது மேற்கொள்ளப்பட்ட உரிமை, மதிப்புரிமை, கடமைப்பாடு அல்லது கடப்பாடு எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(ஈ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதற்கும் எதிராகச் செய்யப்பட்ட குற்றச்செயல் எதைப் பொறுத்தும் உள்ளாகியிருக்கிற தண்டம், தண்டஇழப்பு அல்லது தண்டனை எதனையும் பாதித்தலாகாது; அல்லது

(உ) மேற்சொன்ன உரிமை, மதிப்புரிமை, கடமைப்பாடு, கடப்பாடு, தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையும் பொறுத்த புலனாய்வு சட்ட நடவடிக்கை அல்லது தீருதவி எதனையும் பாதித்தலாகாது.

மற்றும், நீக்கறவு செய்யும் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி இயற்றப்படாதிருந்தாற்போன்றே அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீருதவி எதுவும் தொடரப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது செயலுறுத்தப்படலாம், மற்றும் அத்தகைய தண்டம், தண்டஇழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் வாசகத்தைத் திருத்தம் செய்யும் சட்டத்தை நீக்கறவு செய்தல்.

6 (அ). எந்தச் செய்சட்டத்தினால் பொருட்பாடு எதையும் வெளிப்படையாக விடுத்தோ, புகுத்தியோ, அல்லது மாற்றமைவு செய்தோ ஏதேனும் மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதியின் வாசகம் திருத்தம் செய்யப்பட்டதோ அந்தச் செய் சட்டத்தை, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதுவும், நீக்கறவு செய்யுமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த நீக்கறவானது, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டத்தின் மூலம் செய்யப்பட்டதும், அத்தகைய நீக்கறவு செய்யப்பட்ட காலத்தில் செயற்பாட்டில் இருந்ததுமான திருத்தம் எதுவும் தொடர்ந்திருப்பதைப் பாதிக்கலாகாது.

நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டங்களுக்குப் புத்துயிர் அளித்தல.

*7.* (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு, செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், முழுமையாகவோ பகுதியாகவோ நீக்கறவு செய்யப்பட்ட செய்சட்டம் எதற்கும் முழுமையாகவோ பகுதியாகவோ புத்துயிர் அளிக்கும் நோக்கத்திற்காக, அந்த நோக்கத்தை வெளிப்படையாக உரைத்தல் தேவையாகும்.

(2) இந்தப் பிரிவு, 1968, ஜனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பிறகு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

நீக்கறவு செய்யப்பட்ட செய் சட்டங்களைப் பற்றிய சுட்டுகளுக்குப் பொருள் கொள்ளுதல்.

*8.* (1) இந்தச் சட்டம் அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும், முந்திய ஒரு செய்சட்டத்தின் வகையம் எதனையும் நீக்கறவு செய்து மாற்றமைவுகளுடனோ இல்லாமலோ மறுபடியும் இயற்றுமிடத்து, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட வகையங்களைப் பொறுத்து பிற செய்சட்டம் எதிலும் அல்லது முறையாவணம் எதிலும் உள்ள சுட்டுகைகள், மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையத்தைப் பொறுத்த சுட்டுகைகளாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) 1947 ஆகஸ்டு பதினைந்தாம் நாளுக்கு முன்பு, ஐக்கியக் கூட்டரசின் நாடாளுமன்றச் சட்டம் எதுவும், முந்திய செய்சட்டமொன்றின் வகையம் எதையும் நீக்கறவு செய்து, மாற்றமைவுகளுடனோ இல்லாமலோ மீண்டும் இயற்றுமிடத்து, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட வகையத்தைப் பொறுத்து மையச் சட்டம் எதிலும் அல்லது ஒழுங்குறுத்தும்விதி அல்லது முறையாவணம் எதிலும் உள்ள சுட்டுகைகள், மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அவ்வாறு மறுபடியும் இயற்றப்பட்ட வகையத்தைப் பொறுத்த சுட்டுகைகளாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

காலம் தொடங்குதலும் முடிவுறுதலும்.

*9.* (1). இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், நாட்களின் ஒரு தொடர் அல்லது பிற காலஅளவு எதிலும், முதல்நாளை நீக்கும் நோக்கத்திற்காக “இருந்து” என்ற சொல்லைப் பயன்படுத்துவதும், மற்றும் நாட்களின் ஒரு தொடர் அல்லது பிற காலஅளவு எதிலும் கடைசி நாளைச் சேர்க்கும் நோக்கத்திற்காக “வரை” என்ற சொல்லைப் பயன்படுத்துவதும் போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, ஜனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் அனைத்திற்கும், 1887, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட ஒழுங்குறுத்தும்விதிகள் அனைத்திற்கும் கூடப் பொருந்தும்.

காலத்தைக் கணக்கிடுதல்.

*10.* (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும், குறித்ததொருநாளில் அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒரு காலஅளவுக்குள், நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலும், செயல் எதுவும் செய்யப்படவேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அந்த நாளன்று அல்லது வகுத்துரைக்கப்பட்ட காலஅளவில் கடைசி நாளன்று, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் மூடப்பட்டிருக்குமாயின், அந்தச் செயல் அல்லது நடவடிக்கை, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் திறக்கப்பட்டதற்குப் பின்பு அடுத்த நாளன்று செய்யப்பட்டிருக்குமாயின், அல்லது எடுக்கப்பட்டிருக்குமாயின், அது உரிய காலத்தில் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** எந்தச் செயல் அல்லது நடவடிக்கைக்கு இந்தியக் காலவரம்புச் சட்டம், 1887 பொருந்துகிறதோ அந்தச் செயல் அல்லது நடவடிக்கை எதற்கும் இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பொருந்தாது. *15/1887.*

*(2)* இந்தப் பிரிவு, *1887*, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் அல்லது ஒழுங்குறுத்தும் விதிகள் அனைத்திற்கும் கூடப் பொருந்தும்.

**11.** இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனின் நோக்கங்களையும் பொறுத்தவரை, தூரம் எதையும் அளக்கையில், மாறுபட்ட கருத்துத் தோன்றினாலன்றி, அந்தத் தூரம் கிடைமட்டப் பரப்பின்மீதுள்ள ஒரு நேர்க்கோட்டில் அளக்கப்படுதல் வேண்டும். தொலைவுகளை அளத்தல்.

**12.** இப்போது செல்லாற்றலிலிருக்கிற அல்லது இதன் பின்பு செல்லாற்றலுக்கு வரவிருக்கிற செய்சட்டம் எதனாலும், சுங்கத் தீர்வைகள் அல்லது ஆயத்தீர்வை அல்லது அவற்றின் தன்மையதான எதுவும், சரக்குகளின் அல்லது வணிகச் சரக்கின் எடை அல்லது அளவை அல்லது மதிப்பின் பேரில் கொடுக்கப்பட்ட அளவு எதன் மீதும் விதிக்கத்தக்கவிடத்து, அதைவிட அதிக அல்லது குறைந்த அளவிலான எதன் மீதும், அதேபோன்ற தீர்வையானது, அதே வீதத்தில் தண்டல் செய்யத்தக்கதாகும். செய்சட்டங்களில் சொல்லப்பட்டுள்ள தீர்வையானது விகிதப்படி தண்டல் செய்யப்படும்.

**13.** மையச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும்விதிகள்' அனைத்திலும் பொருளிலோ சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி,— பாலினம் மற்றும் எண்.

*(1)* ஆண் பாலினத்தை உணர்த்தும் சொற்கள் பெண் பாலினத்தையும் உள்ளடக்குவதாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும்

*(2)* ஒருமையிலுள்ள சொற்கள் பன்மையை உள்ளடக்கும் மற்றும் அதேபோன்று நிலைமை எதிர்மாறாகவும் ஆகும்.

*13* (அ). [நீக்கறவு செய்யப்பட்டது].

### அதிகாரங்களும் அதிகாரிகளும்.

**14.** *(1)* இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டிருக்குமிடத்து, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த அதிகாரம், நிகழ்வு வேண்டுறுத்துகிறவாறு, அவ்வப்போது செலுத்தப்படலாம். அவ்வப்போது செலுத்தத்தக்கதாக வழங்கப்பட்ட அதிகாரங்கள்.

*(2)* இந்தப் பிரிவு, *1887*, ஜனவரி பதினான்காம் நாளில் அல்லது அதன் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும்கூடப் பொருந்தும்.

**15.** பதவி எதையும் நிரப்பவும் அல்லது வழங்கப்பட்ட பதவிப்பணி எதையும் நிறைவேற்றவும் நபர் எவரையும் பதவியமர்த்தும் அதிகாரம், மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் வழங்கப்பட்டிருக்குமிடத்து, பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய பதவியமர்த்துகை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்படுமாயின், பெயர் குறிப்பிடுவதன் மூலமாகவோ, அல்லது பதவியின் பயன் திறனாலோ செய்யப்படலாம். பதவியமர்த்துகைக்கான அதிகாரம், பதவிவழி அமர்த்துகைக்கான அதிகாரத்தையும் உள்ளடக்கும்.

**16.** பதவியமர்த்துகை எதையும் செய்யும் அதிகாரமானது, மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் வழங்கப்பட்டிருக்குமிடத்து, மாறுபட்ட கருத்துத் தோன்றினாலன்றி, பதவியமர்த்துகை செய்ய அப்போதைக்கு அதிகாரமுடைய அதிகார அமைப்பானது, அந்த அதிகாரத்தைச் செலுத்தி, அதனாலோ பிற அதிகார அமைப்பு எதனாலுமோ பதவியமர்த்தப்பட்டிருக்கும் நபர் எவரையும் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கோ பணி நீக்குவதற்கோ கூட அதிகாரம் உடையதாகும். பதவியமர்த்துகைக்கான அதிகாரமானது தற்காலிகமாக நிறுத்திவைக்கும் அல்லது பணி நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் உள்ளடக்கும்.

**17.** *(1)* இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், ஒரு பதவியின் பணிகளை அப்போதைக்கு நிறைவேற்றுகிற நபர் ஒவ்வொருவருக்கும் அல்லது பல நபர்களுக்கு ஒரு சட்டம் பொருந்துவதைச் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக, அதிகாரிகளை மாற்றமைவு செய்தல்.

தற்போது பதவிப் பணிகளை நிறைவேற்றுகிற அலுவலரின் அல்லது அந்தப் பதவிப்பணிகள் பொதுவாக எந்த அலுவலரால் நிறைவேற்றப்படுகிறதோ அந்த அலுவலரின் பதவிப்பெயரைக் குறிப்பிடுவது பொதுவானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, ஜனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதன் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

அடுத்து வருபவர்கள்.

**18.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், எவரேனும் அதிகாரியின் அல்லது தொடர்ந்த நிலைப்பாட்டைப் பெற்றுள்ள எவையேனும் கூட்டுருமங்களின் பதவியில் அடுத்து வருபவர்களுக்குள்ள சட்டத் தொடர்பைச் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக, அந்த அதிகாரிகள் அல்லது கூட்டுருமங்களுடன் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவது போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, ஜனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

தலைமை அலுவலர்களும் கீழமைந்தவர்களும்.

**19.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதிலும், ஓர் அலுவலகத்தின் தலைமை அல்லது மேல்நிலை அலுவலருடன் தொடர்புடைய ஒரு சட்டம், அவர்களுடைய மேல்நிலை அலுவலர்களின் இடத்தில் அந்தப் பதவிக் கடமைகளைச் சட்டப்படி புரிகிற பகர உரிமை அலுவலர்களுக்கு அல்லது கீழமைந்த அலுவலர்களுக்குப் பொருந்தும் என்று வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, மேல்நிலை அலுவலரின் கடமையை வகுத்துரைப்பது போதுமானதாகும்.

(2) இந்தப் பிரிவு, 1868, ஜனவரி மூன்றாம் நாளுக்குப் பின்பு செய்யப்பட்ட அனைத்து மையச் சட்டங்களுக்கும், 1887, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப்பின்பு செய்யப்பட்ட அனைத்து ஒழுங்குறுத்தும் விதிகளுக்கும் கூடப் பொருந்தும்.

## செய்சட்டங்களின்படி செய்யப்பட்ட ஆணைகள், விதிகள் முதலியவை குறித்த வகையங்கள்.

செய்சட்டங்களின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் முதலியவற்றின் பொருள்கோள்.

**20.** மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணைவிதி எதையும் பிறப்பிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணைவிதி, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்டிருப்பின், அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்கள், பொருளிலோ அல்லது சூழ்நிலையிலோ முரணானது எதுவும் இருந்தாலன்றி, அதிகாரமளிக்கும் சட்டத்தின் அல்லது ஒழுங்குறுத்தும் விதியில் அவற்றிற்காக முறையே கொண்டுள்ள அதே பொருளினை உடையனவாகும்.

அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அல்லது துணைவிதிகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரமானது அவற்றுடன் சேர்ப்பதற்கு, அவற்றைத் திருத்தம் செய்வதற்கு, மாறுதல் செய்வதற்கு அல்லது இறுத்தறவு செய்வதற்கான அதிகாரத்தையும் உள்ளடக்கும்;

**21.** மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அல்லது துணைவிதிகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்த அதிகாரமானது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அல்லது துணை விதிகள் எவற்றுடனும் சேர்க்கவோ, அவற்றைத் திருத்தம் செய்யவோ, மாற்றவோ, இறுத்தறவு செய்யவோ அதேமுறையிலும் அதே ஒப்பளிப்பு மற்றும் வரைக்கட்டுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றிற்கு உட்பட்டும் செலுத்தத்தக்க அதிகாரத்தையும் உள்ளடக்கும்.

**22.** பிறப்பிக்கப்பட்ட உடனேயே செல்திறம்பெறாத மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும், இந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் பொருந்துகை பொறுத்து ஆணைகள் பிறப்பிக்க, அல்லது நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதையும் நிறுவுவது அல்லது நீதிபதி அல்லது அலுவலர் எவரையும் அதன்படி அமர்த்துவது பொறுத்து, அல்லது இந்தச் சட்டத்தின்படி அல்லது ஒழுங்குறுத்தும் விதியின்படி எந்த நபரால் அல்லது எந்தக் காலத்தில் அல்லது எந்த இடத்தில் அல்லது எந்த முறையில் அல்லது எவ்வளவு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமோ, அந்த நபர், காலம், இடம், முறை, கட்டணங்கள் பொறுத்து, விதிகள் அல்லது துணை விதிகளைச் செய்ய அல்லது ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம் அளிக்கப்படுமிடத்து, அந்த அதிகாரமானது, இந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி பிறப்பிக்கப்பட்ட பின்பு, எந்த நேரத்திலும் செலுத்தப்படலாம்; ஆனால், அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதிகள், துணைவிதிகள் அல்லது ஆணைகள், அந்தச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி தொடங்கும் வரையில் செல்திறம் பெறுதல் ஆகாது. செய்சட்டம் இயற்றப் படுவதற்கும் அதன் தொடக்க நிலைக்கும் இடையே விதிகள் அல்லது துணை விதிகள் செய்வதும் ஆணைகளைப் பிறப்பிப்பதும்.

**23.** மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும் விதிகள் அல்லது துணைவிதிகள் செய்வதற்கான அதிகாரமானது, அந்த விதிகள் அல்லது துணைவிதிகள் முன்னதாக வெளியிடப்பட்ட பின்னரே செய்யப்படுதல் வேண்டுமென்ற வரைக்கட்டுக்கு உட்பட்டு, கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறவிடத்து, பின்வரும் வகையங்கள் பொருந்தும். அவையாவன:— முந்திய வெளியீட்டிற்கும் பின்பு விதிகள் அல்லது துணை விதிகள் செய்வதற்குப் பொருந்தத்தக்க வகையங்கள்.

(1) அந்த விதிகளை அல்லது துணை விதிகளைச் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற அதிகார அமைப்பானது, அவற்றைச் செய்வதற்கு முன்பு, அதனால் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தகவலளிப்பதாக கருதப்பட்ட விதிகள் அல்லது துணை விதிகளின் வரைவு ஒன்றை வெளியிடுதல் வேண்டும்;

(2) அந்த அதிகார அமைப்பு போதுமானதெனக் கொள்ளும் முறையிலோ, அல்லது முந்திய வெளியீடு பொறுத்த வரைக்கட்டு அவ்வாறு வேண்டுறுத்தப்படுமாயின், தொடர்புடைய அரசாங்கம் விதிக்கிற முறையிலோ வெளியிடப்படுதல் வேண்டும்;

(3) அந்த வரைவுடன், அந்த வரைவு எந்தத் தேதியில் அல்லது எந்தத் தேதிக்குப் பின்பு ஓர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைக் குறித்துரைக்கும் அறிவிப்பு ஒன்றும் வெளியிடப்படுதல் வேண்டும்;

(4) விதிகள் அல்லது துணை விதிகள் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற அதிகார அமைப்பும், அந்த விதிகள் அல்லது துணை விதிகள் பிறிதோர் அதிகார அமைப்பின் ஒப்பளிப்புடன், ஒப்பேற்புடன் அல்லது ஒருங்கிசைவுடன் செய்யப்படவிருக்குமிடத்து அந்த அதிகாரஅமைப்பும்கூட அந்த வரைவு பொறுத்து, அந்த விதிகள் அல்லது துணைவிதிகள் செய்வதற்கு, அதிகாரம் பெற்றிருக்கிற அதிகார அமைப்பால் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்பே நபர் எவரிடமிருந்தும் பெறப்படலாகும் மறுப்புரை அல்லது தூண்டுரை எதையும் ஓர்வு செய்தல் வேண்டும்;

(5) முந்திய வெளியீட்டுக்குப் பின்பு, விதிகள் அல்லது துணை விதிகளைச் செய்யும் ஓர் அதிகாரத்தைச் செலுத்திச் செய்யப்பட்டிருப்பதாகப் புலப்படுகிற விதி அல்லது துணை விதி, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்டிருப்பதானது, அந்த விதி அல்லது துணை விதி உரியவாறு செய்யப்பட்டிருப்பதற்கான அறுதியான மெய்ப்பிப்பாகும்.

14/1874 **24.** மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதுவும், அந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு நீக்கறவு செய்யப்பட்டு மற்றும் மாற்றமைவுடனோ இல்லாமலோ மீண்டும் இயற்றப்படுமிடத்து, பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, நீக்கறவு செய்யப்பட்ட சட்டம் அல்லது, ஒழுங்குறுத்தும்விதிகளின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பதவியமர்த்துகை, அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணை விதி எதுவும், மீண்டும் இயற்றப்பட்ட வகையங்களுடன் எந்த அளவுக்கு அது ஒவ்வாததாக இல்லாதிருக்கிறதோ அந்த அளவுக்கு, தொடர்ந்து செல்லாற்றலில் நீக்கறவு செய்யப்பட்டு மீண்டும் இயற்றப்பட்ட செய்சட்டங்களின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் முதலியவை தொடர்ந்திருத்தல்.

இருக்கும்; மேலும், அவ்வாறு மீண்டும் இயற்றப்பட்ட வகையங்களின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பதவியமர்த்துகை, அறிவிக்கை, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணை விதி எதனாலும் தள்ளறவு செய்யப்பட்டாலன்றியும், செய்யப்படும் வரையிலும் அவ்வாறு மீண்டும் இயற்றப்பட்ட வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதுவும், பட்டியலில் கண்ட மாவட்டங்கள் சட்டம், 1874 இன் பிரிவு 5 அல்லது 5 (அ) இன் படியோ அல்லது அதைப் போன்ற சட்டம் எதன்படியுமோ ஓர் அறிவிக்கை வாயிலாக வட்டாரப் பரப்பிடம் எதற்கும் அளாவும்படி செய்யப்பட்டிருந்து, பிந்திய அறிவிக்கை ஒன்றினால் அதிலிருந்து நீக்கப்பட்டு, அந்தப் பரப்பு அல்லது அதன் பகுதி எதற்கும் மீண்டும் அளாவும்படிச் செய்யப்படும்போது, அத்தகைய சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதியின் வகையங்கள், அத்தகைய பரப்பிடம் அல்லது பகுதியில், இந்தப் பிரிவின் பொருளின்படி நீக்கறவு செய்யப்பட்டு மீண்டும் இயற்றப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

### பல்வகைப்பட்டவை

அபராதங்களை வசூல் செய்தல்.

25. இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 63 முதல் 70 வரையுள்ளவையும், அபராதங்களை வசூல் செய்வதற்காக ஆணை பிறப்பித்தல் மற்றும் அதனை நிறைவேற்றுதல் தொடர்பாக, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் வகையங்களும், சட்டம், ஒழுங்குறுத்தும் விதி அல்லது துணை விதி எதன்படியும் விதிக்கப்பட்ட அனைத்து அபராதங்களுக்கும், அந்தச் சட்டம், ஒழுங்குறுத்தும் விதி, விதி அல்லது துணை விதி, அதற்கு முரணாக ஒரு வெளிப்படையான வகையத்தைக் கொண்டிருந்தாலன்றி, பொருந்தும். 45/1860

இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட செய்சட்டங்களின்படி தண்டிக்கப் படத்தக்க குற்றச்செயல்கள் குறித்த வகையம்.

26. ஒரு செய்கை அல்லது விடுகையானது, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட செய்சட்டங்களின்படி ஒரு குற்றச்செயலாக அமையுமிடத்து, அந்தக் குற்றவாளி, அந்தச் செய்சட்டங்கள் இரண்டில் ஏதொன்றின்படியும் அல்லது அவற்றுள் எதன்படியும், வழக்குத் தொடரப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாவார். ஆனால், ஒரே குற்றச்செயலுக்காக இரண்டு முறை தண்டிக்கப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.

அஞ்சல் வழி சார்வு செய்தலின் பொருள்.

27. இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதுவும், அஞ்சல் வழி ஆவணம் எதுவும் சார்வு செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கிறவிடத்து அல்லது அதனை வேண்டுறுத்துகிறவிடத்து, "சார்வு செய்" என்ற சொற்றொடரோ அல்லது "கொடு" அல்லது "அனுப்பு" என்ற சொற்றொடர்களின் இரண்டில் ஒன்றோ, அல்லது பிற சொற்றொடர் எதுவுமோ பயன்படுத்தப்பட்டிருந்தாலும், மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த ஆவணத்தைக் கொண்டுள்ள கடிதமானது முறையாக முகவரியிடப்பட்டு, முன்னதாகப் பணம் செலுத்தப்பட்டு, மேலும் பதிவு அஞ்சல் வழி அனுப்பப்படுவதனால் சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மேலும், அதற்கு மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றி, அந்தக் கடிதம் வழக்கமான அஞ்சல் போக்கில் எந்த நேரத்தில் கொடுக்கப்படுமோ, அந்த நேரத்தில் சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

செய்சட்டங்களைச் சுட்டிக் குறிப்பிடுதல்.

28. (1) மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதிலும், மற்றும் அத்தகைய சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதன்படியும் அல்லது அது குறித்துச் செய்யப்பட்ட விதி, துணை விதி, முறையாவணம் அல்லது ஆவணம் எதிலும், செய்சட்டம் எதுவும், அதற்களிக்கப்பட்ட தலைப்பு அல்லது குறுந்தலைப்பு (ஏதேனுமிருப்பின்) அதைச் சுட்டுவதன் வாயிலாக அல்லது அதன் எண் மற்றும் ஆண்டைச் சுட்டுவதன் வாயிலாகச் சுட்டிக் குறிப்பிடப்படலாம், மேலும் செய்சட்டம் ஒன்றிலுள்ள வகையம் எதுவும், அந்த வகையம் எந்தச் செய்சட்டத்தின் பிரிவு அல்லது உட்பிரிவில் அடங்கியுள்ளதோ, அந்தச்

செய்சட்டத்தின் பிரிவு அல்லது உட்பிரிவினைச் சுட்டுவதன் வாயிலாகக் குறிப்பிடப்படலாம்.

(2) இந்தச் சட்டத்திலும் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதிலும், பிறிதொரு செய்சட்டத்தின் பகுதி ஒன்றின் விவரிப்பு அல்லது குறிப்பிடுகையானது, மாறுபட்ட கருத்து தோன்றினாலன்றி, அந்த விவரிப்பு அல்லது குறிப்பிடுகையில் அடங்கியுள்ள பகுதி தொடக்கமாக அமைவதாகவும் முடிவாக அமைவதாகவும் குறிப்பிடப்படுகிற அல்லது சுட்டப்படுகிற சொல், பிரிவு அல்லது பிற பகுதியை உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

முந்திய செய்சட்டங்கள், விதிகள் மற்றும் துணை விதிகளுக்கான காப்பு.

29. இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட சட்டங்கள், ஒழுங்குறுத்தும்விதிகள், அல்லது துணை விதிகளைப் பொருள்கொள்வது தொடர்பான இச்சட்டத்தின் வகையங்கள், இச்சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு செய்யப்பட்ட சட்டம், ஒழுங்குறுத்தும் விதி, விதி, துணை விதி எதையும் பொருள்கொள்ளுவதை அந்தச் சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, விதி அல்லது துணை விதியானது, இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட ஒரு விதியானது இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு செய்யப்பட்ட ஒரு சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, விதி அல்லது துணை விதியினால் தொடர்ந்திருக்கும்படி செய்யப்பட்டு அல்லது திருத்தம் செய்யப்பட்டு இருந்தபோதிலும் பாதித்தல் ஆகாது.

அவசரச் சட்டங்களுக்கு இச்சட்டம் பொருந்துதல்.

30. இந்தச் சட்டத்தின் பிரிவு 5 இல் தவிர "மையச் சட்டம்" என்ற சொற்றொடர் எங்கெங்கு வருகிறதோ அங்கெல்லாம் மற்றும் பிரிவு 3 இன் கூறுகள் (9), (13), (25), (40), (43), (52), (54) ஆகியவற்றிலும் பிரிவு 25 லும் உள்ள "சட்டம்" என்ற சொல், இந்திய ஆட்சியவைகள் சட்டம், 1861 இன் பிரிவு 23 அல்லது இந்திய அரசாங்கச் சட்டம், 1915இன் பிரிவு 72 அல்லது இந்திய அரசாங்கச் சட்டத்தின் பிரிவு 42இன்படி ஆளுநர் தலைவரால் செய்யப்பட்டு, மற்றும் சாற்றம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தையும், மற்றும் அரசமைப்பின் உறுப்பு 123 இன்படி குடியரசுத் தலைவரால் சாற்றம் செய்யப்பட்ட ஓர் அவசரச் சட்டத்தையும் உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

30. அ [நீக்கறவு செய்யப்பட்டது.]

31. [நீக்கறவு செய்யப்பட்டது].

இணைப்புப் பட்டியல் [நீக்கறவு செய்யப்பட்டது]